OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.2.2020

Accepted: 4.3.2020

Published: 01.04.2020

Citation:
Radha, M. (2020). Female Education and Marital Problems in Thilagavathi's Stories. *Shanlax International Journals of Tamil Research*, *4*(4), 28–33.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2333

*Corresponding Author:
radhasambasivam@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Female Education and Marital Problems in Thilagavathi's Stories

**M. Radha***
*Research Scholar in Ph.D. Islamiah College (Autonomous)*
*Department of Tamil, Vaniyambadi*
*&*
*Assistant Professor in Tamil, K.M.G College of Arts & Science*
*Ammangakuppam Village, Gudiyatham, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-8674-6409

**Abstract** – Themes in the history of Tamil literature adapt to the contemporary context. Literature is created by people with different levels of life. Political economics, socio-cultural and spiritual movements that arise from time to time affect literary creation. History in the history of literature is changing according to the context of the period in which the love of heroism and devotion to the religion of liberation in the world of literature.

**Key Words:** Tamil short story, Thilagavathi's short story, Female education, Marriage, Divorce.

## References

1. Cambridge *Internationl Dictionary of English*, p.1370.
2. *Tamil Leksicon, Vol.II*, p.131.
3. Devi, *The Gender of power*, p.122.
4. *Thilagavathy stories - 1*. Rudhra Publication.

# திலகவதியின் கதைகளில் பெண் கல்வியும், திருமணச் சிக்கலும்

*மு. ராதா*
முனைவர் பட்ட ஆய்வாளர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
இசுலாமியாக் கல்லூரி (தன்னாட்சி), வாணியம்பாடி

***ஆய்வுச் சுருக்கம்*** *– தமிழ் இலக்கிய வரலாற்றில் கருப்பொருள்கள் அவ்வக்காலச் சூழலுக்கு ஏற்ப அமைகின்றன. பலவகைப்பட்ட வாழ்க்கை நிலைகளில் இருப்பவர்களால் இலக்கியம் படைக்கப்படுகிறது. அவ்வப்போது சமுதாயத்தில் எழுகின்ற அரசியல், பொருளியல், சமூகக் கலாச்சார ஆன்மிக இயக்கங்கள் இலக்கிய ஆக்கத்தைப் பாதிக்கின்றன. தமிழிலக்கியத்தில் காதல், வீரம், அறம், பக்தி, தனி மனிதப் புகழ்ச்சி, சமயக் கருத்துக்கள், விடுதலை உணர்ச்சி, தமிழுணர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு, இளமை மணம், பெண் விடுதலை என்று காலச் சூழலுக்கு ஏற்ப இலக்கியப் பாடுபொருள்களும் மாறி அமைந்துள்ளதை வரலாறு உணர்த்துகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்ச் சிறுகதை, திலகவதியின் சிறுகதை, சமுதாயம், பெண்கல்வி, திருமணம், மணமுறிவு.*

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கருப்பொருள்கள் அவ்வக்காலச் சூழலுக்கு ஏற்ப அமைகின்றன. பலவகைப்பட்ட வாழ்க்கை நிலைகளில் இருப்பவர்களால் இலக்கியம் படைக்கப்படுகிறது. அவ்வப்போது சமுதாயத்தில் எழுகின்ற அரசியல், பொருளியல், சமூகக் கலாச்சார ஆன்மிக இயக்கங்கள் இலக்கிய ஆக்கத்தைப் பாதிக்கின்றன. தமிழிலக்கியத்தில் காதல், வீரம், அறம், பக்தி, தனி மனிதப் புகழ்ச்சி, சமயக் கருத்துக்கள், விடுதலை உணர்ச்சி, தமிழுணர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு, இளமை மணம், பெண் விடுதலை என்று காலச் சூழலுக்கு ஏற்ப இலக்கியப் பாடுபொருள்களும் மாறி அமைந்துள்ளதை வரலாறு உணர்த்துகிறது.

## கருதுகோள்

அறிவியல், தொழில்நுட்ப வசதிகள் மிகுந்து விளங்கும் தற்காலத்தில் வாழ்க்கைத்தரம், வாழ்வியல் முறை, சமுதாயச் சூழல் முதலானவை குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றுள்ளன. பல பரிமாணங்களைக் கொண்டு விளங்கும் திலகவதியின் கதைகள் சமூகச்சிக்கல்களைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. திலகவதியின் சிறுகதைகள் சித்திரிக்கும் பெண் சமூகத்தை எடுத்துரைப்பதாகக் கருதுகோளை வரையறுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## சமுதாயம்

ஓர் ஒழுங்கின் அடிப்படையில் ஒரே சிந்தனை, ஒரே எண்ணம் என ஒன்றுபட்டு, ஒரே இடத்தில் தங்கள் வாழ்க்கை முறையினைச் சீராக அமைத்துக்கொண்டவர்களாக, தமக்கு தேவையானவற்றைத் தாங்களே பங்கிட்டு நிறைவேற்றிக்கொள்பவர்களாக வாழக்கூடிய ஒரு குழுவான மக்களைச் "சமுதாயம்" என அழைக்கலாம். சுருங்கக்கூறின் கூட்டமாய் வாழ்வது சமுதாயமல்ல, கூடிவாழ்வதே சமுதாயம் எனலாம். ஒரு நாட்டில் அல்லது பல்வேறு நாடுகளில் வாழக்கூடிய ஒரே மாதிரியான எண்ணங்கள், வாழ்க்கை முறைகள் கொண்டவர்களையும் சமுதாயம் என்று அழைக்கலாம்" என்கிறது கேம்பிரிட்ஜ் அகராதி.[1]

சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும். இது மக்கள் ஒன்றுகூடி ஒன்றுப்பட்ட எண்ணத்துடன் ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும். சமுதாயம் சமூகத்திற்குள் அடங்குவது[2] என வாழ்வியற் களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது. இந்தச் சமுதாயம் என்ற சொல்லிற்கு மக்கள்திரள் பொருளின்திரள், கோவில் நிர்வாக அதிகாரிகளின் வட்டம், பொதுவானது. பொதுவாகப் பேணும் அவரவர்க்குரிய பங்குபடி, அனுபவிக்கப்படும் ஊர்ச்சொத்து, உடன்படிக்கை என்னும், பொருள்களில் லெக்சிகன் விளக்கம் தருகிறது.[3]

### சமூகம்

மனிதன் ஒரு சமூக விலங்கு, மனிதத்தன்மை சமூகவாழ்வை அவசியமாக்குகின்றது என்பார் அரிஸ்டாட்டில்.[4] தம்மைப் பேணிப்பாதுகாத்துக் கொள்வதற்கும் அழியாமல் நிலைநிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள ஒரு மானிடக் குழு சமூகம் எனப்படும்[5] என்று வாழ்வியற் களஞ்சியம் பொருள் கூறுகின்றது. அதேநேரத்தில் சமூகம் என்ற சொல், தன்னளவில் மாறுபாடுகளுக்கு உட்பட்ட சொல், பொருள்கள் அல்லாத மாறுபட்ட கூறுகளை உள்ளடக்கியது. மேலும், சமூக நிறுவனங்களைத் தன்பால் உடையதாகவும், நோக்கங்கள், சிந்தனைகள், திறமைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாகவும் அது அமைகின்றது[6] எனத் திறனாய்வாளர் இரா. தண்டாயுதம் எடுத்துக் கூறுவர்.

தனியாகவும், ஒரு கூட்டமாகவும் இருந்த மனிதர்கள் தங்களுடைய ஒத்த தனிமையை உணர்ந்து அதன் காரணமாகப் பொதுவான நோக்கங்களை அடையச் சேர்ந்து முயலுகிறபோது உண்டாவது தான் சமூகம் ஆகும். பொதுவான குறிக்கோளை அடைவதற்குச் செயல்படும் பகுத்தறிவுள்ள மக்களின் ஒழுக்க நியதிக்கு உட்பட்ட பிணைப்பே சமூகம் என்று ஆய்வாளர் க.ப. அறவாணன் வரையறுப்பர்.[7]

இதே கருத்தினை வலியுறுத்தவது போலவே காணப்படும் இன்னொரு செய்தி, நாகரிகம் வளரவளர மனிதர் சிறுசிறு கூட்டமாக வாழ்ந்து வந்த நிலையிலிருந்து பெரிய சமுதாயமாக வாழும் நிலைக்கு உயர்ந்துள்ளனர். வர வர சிறுநாடுகள் பலவும் ஒரு குடும்பத்தின் உறுப்புகள்போல் மாறி உலகமே ஒரு பெரும் சமுதாய அமைப்பாக உருக்கொண்டது[8] என்ற மு.வரதராசரின் கூற்றில் பல சமுதாயங்களின் தொகுப்பே சமூகம் என்ற கருத்தினை உய்த்து உணரலாம். இவ்வாறான சமூகத்தில் முகிழ்கின்ற இலக்கியங்களில் ஒன்றான சிறுகதைகளில் திலகவதி பல வாழ்வியல் கூறுகளைச் சித்திரித்துக்காட்டப்பட்டுள்ளது.

### பெண் கல்வி மறுப்பு

பெண்களுக்குக் கல்வி அவசியமில்லை ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்தால் போதும் வரவு செலவுக் கணக்குப் பார்க்கும் அளவிற்குப் படிக்கத் தெரிந்தாலும் போதும் ஆண்கள் அளவிற்குப் படிப்பு. தேவையில்லை குடும்பத்தைச் செம்மையாக நிர்வகித்தால் போதும் படிப்பு அதிகம் தேவையில்லை படித்த பெண் அடங்கி நடக்க மாட்டாள் மதிக்க மாட்டாள் எனப் பெண்ணுக்குக் கல்வி அளிப்பது தொடர்பான கருத்துகள் சமுதாயத்தில் உள்ளன.

இந்தியச் சமூகத்தில் கி.மு.3 ஆம் நூற்றாண்டு வரையில் பெண் கல்விக்கு எதிர்ப்பில்லை. வேத காலத்தில் பெண் கல்விக்குத் தடைவிதிக்கவில்லை. சமண, பௌத்தர் காலத்தில் பெண்கள் சமயத்துறை அறிவிற்காகக் கல்வி கற்றனர். 19ஆம் நூற்றாண்டு பெண் கல்வி அதிகமாகப் புறக்கணிக்கப்பட்டது. பின்பு, சமுதாய முன்னேற்றம் பெண் கல்வியோடு தொடர்புடையது என்று உணர்ந்து பெண் கல்விக்கான முயற்சி தொடங்கப்பட்டு இது வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

19ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்காக இடைவிடாது எடுக்கப்பட்ட முயற்சி பெண்

கல்விக்கே ஆகும்.[9] இந்த முயற்சியின் விளைவாக இன்று பெண் கல்வியின் பரப்பு விரிந்துள்ளது இருப்பினும் பெண் கல்வி மறுப்பு தொடர்ந்து கொண்டே உள்ளது. திலகவதியின் சிறுகதைகளில், பல்வேறு காரணங்களுக்காகப் பெண் கல்வி தடை செய்யப்பட்டுள்ளதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

சமுதாயம், பெண்ணுக்கு உரிய வயதில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. அப்படி உரிய காலத்தில் திருமணம் செய்யவில்லை எனில் பெற்றோர் பல வினாக்களுக்கும், பெண் பல ஐயங்களும் இடமளித்தவர்களாகின்றனர். எனவே தற்கால நிலைமைக்குத் தக்கவாறு தன் மகள் மகாலட்சுமி கல்லூரிப் படிப்பு முடித்தவுடன் திருமணத்தை நடத்த முற்படுகிறார், முகுந்தன் அவளுடைய மனைவி மேற்கொண்டும் மகளைப் படிக்க வைக்கலாம் என்கிறாள். முகுந்தன், "படிச்சிருக்கிற பி.காம் படிப்பே போதும். ஏதோ பொண்ணு காலேஜ் வரைக்கும் படிக்கணும்னே. படிச்சாச்சி. இப்ப கல்யாணத்தைப் பண்ணியாலணும். நாலு ஜனம் சேர்ற எடத்துக்குப் போனா, சம்பந்தா சம்பந்தமில்லாதவனெல்லாம், "எப்ப சார் உங்க பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணப் போறீகங்கறான். இல்லேன்னா, "எப்ப சார் கல்யாண சாப்பாடு போட போறீங்கங்கறான்..."[10] என்றும், ஒருவரும் மேற்கொண்டு என்ன படிக்க வைக்கிறீங்க என்று கேட்காததையும் எடுத்துக் கூறி தன் கருத்துக்கு வலிமை சேர்க்கிறார். மேலும் சமுதாயம் வகுத்துள்ள சில வரையறைகளை மீற விரும்பாத மனப்பாங்கு இதில தெரிகிறது மேற்படிப்பு மகளின் அறிவை, திறமையை வளர்த்து வாழ்க்கையை மேம்படுத்தும் என்ற எண்ணம் இல்லாமலிருக்கிறார்.

வகுப்பில் முதல் மாணவியாக, விளங்கிய பார்வதி மேற்கொண்டு படிக்க வேண்டும் என்று விரும்பியபோது, வீட்டுப் பொருளாதார நிலையைக் காட்டி, "இத பாரும்மா, பையன் படிச்சிருக்கான். பட்டணத்துல வேலையாயிருக்கிறான். வேற என்ன கொறை. என் நிலைமையையும் நெனச்சிப்பாரு. எனக்கும் ரிடையராகற காலம் நெருங்கிடிச்சி. உனக்குப் பின்னால ரெண்டு தங்கச்சியும், தம்பியும் இருக்கறாங்க. ஞாபகம் இருக்கட்டும். தலைச்சனா இருக்கிற உங்கல்யாணத்தை மொதல்ல முடிச்சிட்டன்னா மளமளன்னு அடுத்து அடுத்து ஆக வேண்டிய வேலையைப் பார்ப்பேன்."[11] எனக் காரணம் காட்டி கல்வியைவிடத் திருமணமே முக்கியம் என அவளுக்குத் திருமணம் செய்து வைக்கிறார். இவ்வாறு பெண் கல்வி பல்வேறு காரணங்களால் தடை செய்யப்படுவதைப் படைத்திருக்கும் திலகவதி, அதன் தேவையை உணர்ந்து, தம் சிறுகதைகளில் பெரும்பாலான பெண்களைப் படித்தவர்களாகவே படைத்திருக்கின்றார்.

### திருமணம்

திருமணத்தின் மூலமாகத்தான் ஆணும் பெண்ணும் பண்பட்டு குடும்ப வாழ்க்கையில் திளைத்து சமுகத்தைக் குழந்தைகளின் வாயிலாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று கருதி திருமணத்தை வரைமுறைப் படுத்தியபோது சமுதாயம் பண்பாட்டுடன் வாழத் தடைப்பட்டது. "திருமணம் வற்புறுத்தப்படுதலும் திருமணத்தை, மறுத்தலும் சமய, சமுதாயத் தேவைகளுக்கோ, மரபு பண்பாட்டுக் கடமைகளுக்கோ மட்டுமல்லாது உடல், உணர்வு, சமுதாய மதிப்பு, தனிப்பட்ட வசதிகள், நன்மைகள் முதலியவற்றிற்கு மிகத் தேவையான ஒன்றாகத் திருமணம் கருதப்படுகின்றது"[12] என்பர் திறனாய்வாளர்.

### காதல் திருமணம்

ஒரு பெண் காதல் திருமணத்தில் தெளிவானக் கொள்கையின் கீழ் முடிவெடுக்க வேண்டும் அந்தத் தெளிவான மனப்பக்குவம் இருந்தால் காதல் வாழ்க்கை கடைசி வரை இன்பமாக இருக்கும் என்பதை இச்சிறுகதைக் காட்டுகிறது.

அபூர்வா தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிகிறாள் ரகு, சங்கர் உடன் பணிபுரியும் பணியாளர்கள் இருவரும் அபூர்வாவிடம் காதலைச் சொல்கிறார்கள் ரகுவை வாழ்க்கைத்துணைவனாகத் தேர்ந்தெடுக்கிறாள். சங்கர் தான் இறந்துவிடுவேன் என்று பயமுறுத்தும் போது "காதல் இப்படியெல்லாம் பேச வைக்காது, பைத்தியம் பிடிக்க வைக்காது. உண்ணாவிரதம் வளர்க்கிறதில்லை. காதல் சுடர் விடுகிற அகல் விளக்கு மாதிரி. இன்னொரு தீபத்தையும் ஏற்றும். தானும் வெளிச்சம் தரும். சந்தோஷத்தை உண்டு பண்ணும் சங்கடத்தை அகற்றும்..."[13] என்று விளக்கம் கொடுத்து அவனைத் திருத்துகிறாள். காதலில் மிரட்டலுக்குப் பயந்து திருமணம் செய்துகெள்ளக் கூடாது என இச்சிறுகதை மூலம் ஆசிரியர் விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார்.

## பெற்றோர் தேர்ந்தெடுக்கும் திருமணம்

திருமணப் பேச்சு எடுத்ததும் அவசர அவசரமாக முடிவு எடுக்காமல், ஒவ்வொருவரும் சரியான துணைக்காகக் காத்திருந்தால் பல சோகங்களை நிவர்த்திச் செய்யலாம் என்பதை இச்சிறுகதை உணர்த்துகிறது. இச்சமூகத்தில் இன்றைக்கும் பெண் என்பவள் கல்யாண மார்க்கட்டிலே விலைக்கு வைத்திருக்கும் ஒரு சரக்குப் பொருளாகவே இருக்கிறாள் என்பதை முப்பது வயதாகியும் திருமணமாகாமல் இருக்கும் சகுந்தலா உணர்கிறாள். நிறைய வரன்கள் தட்டிப்போகச் சேகர் என்பவர் திருமணம் செய்துகொள்ள விருப்பப்படுகின்றார். சட்டமும் சம்பிரதாயமும் ஒருவரையொருவர் இல்லற வாழ்வில் இணைத்து வைத்தாலும், கணவன் மனைவியாக அவர்கள் கடமையை ஒருவருக்கொருவர் நிறைவேற்றிக்கொள்ள முடியுமா என்று சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்று அவள் அம்மா விழிப்புணர்வு ஏற்படுத்துகிறாள். மேலும், தன்னுடைய கசப்பான அநுபவத்தினால் "சகுந்தலா, உனக்கு மனப்பூர்வமா பிடிக்கலேன்னா, நீ கல்யாணமே பண்ணிக்காதே. தனியாவே இருந்துடு. அதுதான் நல்லது"[14] என்கிறாள். திருமணம் செய்து கொண்டு நிம்மதியின்றி வாழ்வதைவிட, தனியாகச் சந்தோஷமாக வாழ்வதே சிறந்தது என்பதை இச்சிறுகதையில் ஆசிரியர் உணர்த்துகிறார்.

## விவாகரத்து

கலா வழக்கறிஞராகப் பணியாற்றுகிறாள் பெண்களின் பிரச்சினைக்காகப் பெண்களே முன் வந்து போராட வேண்டும் நல்லது செய்ய வேண்டும் என்பவள் பெண் படித்து வேலைக்குச் சென்று விட்டாள், கட்டிய கணவனை மதிக்கமாட்டாள் என்று பிறர் கூறுவதை நினைத்துக் கணவனிடம் சகித்துக் கொண்டு வாழ்பவள் துளசி கணவன் விவாகரத்திற்கு நீதிமன்றம் போகும் போது துளசி, தான் முன்னதாகவே அவனைவிட்டு விலகியிருந்தால் உடம்பு ஆரோக்கியமாகவும், சம்பாதித்ததும் சேமித்ததும் வைத்திருக்கலாம் என உணருகிறாள். கருணா என்பவள் "என் வாழ்க்கையைப் பாத்து நாலு பேரு பரிதாபப் படுவாங்களேதவிர அருவருப்படைய மாட்டாங்கங்கற நம்பிக்கை வந்துச்சி. பதினேழு வயசிலேயே ஒரு குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு ரெண்டு புள்ள பெத்துட்டதாலே, இருபத்து மூணு வயசிலேயே ஒருத்தி விதவையைப்போல வாழணுங்கற அவசியம் இல்லங்கற தெளிவு வந்திச்சி"[15] என்று துளசியிடம் கூறுகிறாள். தொந்தரவுகளைச் சகித்துக்கொண்டு வாழ்வதைவிடக் குடும்ப உறவை உடைத்துக் கொண்டு வெளியே வருவதே சிறந்தது என்பதை இச்சிறுகதை குறிப்பாய் உணர்த்துகிறது.

## முடிவுரை

பெண் கல்வி பல்வேறு காரணங்கள் தடை செய்யப்படுவதைப் படைத்திருக்கும் ஆசிரியர், அதன் தேவையை உணர்ந்து, பெரும்பாலான பெண்களைப் படித்தவர்களாகவே படைத்திருக்கிறார். காதல், இல்வாழ்வு, பணியிடம் முதலானவற்றில் தோல்விகளும் சிக்கல்களும் ஏற்பட்டபோது மன உறுதியுடன் அவற்றை எதிர்கொள்பவர்களாகப் பெரும்பாலான பெண்கள் உள்ளனர். பெண்கள் தமது

விரும்பம், வசதி ஆகியவற்றுக்கு ஏற்பத் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் தயங்காத மன உறுதி கொண்டவர்களாக உள்ளனர். பெண்களின் வாழ்க்கையில் திருமணத்தைப் பொறுத்தவரை, பெண்கள் திருமணம் செய்து கொள்ளும்படி பெற்றோரால் வற்புறுத்தப்பட்டுள்ளனர். ஆணாதிக்கப் போக்கு, அதனால் பெண்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள், பெண்கள் ஆணாதிக்கத் திலிருந்து விடுபட்டுத் தனித்து உறுதியோடு சமுதாயத்தில் வாழ முற்படும் நிலை ஆகியவை இவரது படைப்புகளில் பரவலாகக் காணப்படுகின்றன.

### சான்றெண் விளக்கம்

1. Cambridge, *Internationl Dictionary of English*, p.1370.
2. *வாழ்வியற் களஞ்சியம்*, தொகுதி எட்டு, ப.588.
3. *Tamil Leksicon, Vol.II*, p.131.
4. ஜெயபாலன், *விழியோர வெளிச்சங்கள்*, ப.1.
5. *வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு*, ப.588.
6. தண்டாயுதம், இரா. *சமூக நாவல்*, ப.38.
7. அறவாணன், கப. *படைப்பாளி சமுதாயம் இலக்கியம்*, ப.138.
8. வரதராசன், மு. *இலக்கிய மரபு*, ப.105.
9. முத்துச் சிதம்பரம். *பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்*, பக். 167-168.
10. திலகவதி, "*போன்சாய்ப் பெண்கள்*", திலகவதி கதைகள்-2, பக்.341-342.
11. திலகவதி, "*நேசத்துக்குரிய எதிராளி*", மே.கு.நூ., ப.399.
12. Devi, *The Gender of power*, p122.
13. திலகவதி, திலகவதி கதைகள் - 1, ப. 372.
14. மேலது. ப. 351.
15. மேலது. ப. 412.

### துணைநூல் பட்டியல் நூல்கள்

1. திலகவதி - *திலகவதி கதைகள் -1*, ருத்ரா பதிப்பகம், தஞ்சாவூர், 2002.
2. திலகவதி - *திலகவதி கதைகள் -2*, ருத்ரா பதிப்பகம், தஞ்சாவூர், 2002.